# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.10/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | . |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | .அண்ணாமலை |
| Father's Name | : | . த.பெ.முனுசாமி |
| Village | : | . இளங்காடு கிராமம் |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | . 52 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 13.02.2026.

**1, 3, 5 , 7 எதிரி கள்ஆஜர். 2, 4, 6 எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட விலாகத்தில் வசித்து வருகிறேன். சென்னையில் ஷேர் ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் எதிரிகள் அனைவரும் எனது உறவினர்கள். பட்டியல் சாட்சி 1 அங்காள பரமேஸ்வரி எனது மனைவி. அ.சா.1 எனது அக்கா, சாட்சி பட்டியல் சாட்சி 3 எல்லம்மாள் எனது அம்மா.

சுமார் 2014ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை. 7ம் மாதம் நான் பிழைப்பிற்காக சென்னைக்கு சென்று விட்டேன். சுமார் 10 மணி அளவில் எனது மனைவி எனக்கு போன் செய்து ஏழுமலை, பிரபு, பால (எ) பாலகிருஷ்ணன், குப்பன், மஞ்சுளா ஆகியோர் வந்து எனது மனைவியை அடித்துவிட்டதாகவும், அதனால் தனக்கு மயக்கம் ஏற்பட்டதாகவும் கீழே விழுந்துவிட்டதாகவும் ஆம்புலன்ஸ்சில் ஏற்றி வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றுவிட்டதாகவும் சொன்னார்.

மேற்படி சம்பவத்தில் எனது தாயாருக்கும், அக்காவுக்கும் காயம் ஏற்பட்டதாக சொன்னார். எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்ததால் மேற்படி சம்பவம் நடந்தது போலிசார் என்னை விசாரித்தார்கள் பின்பு இரவு 11.30 மணி அளவில் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன்.

**மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

//**உண்மை நகல்**//

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.